தமிழ்நாட்டு தொல்லியல் தளங்களின்

அண்மைக்கால அறிவியல் காலக்கணக்கீடுகள்

தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை

தமிழ்நாட்டுத் தொல்லியல் தளங்களின்

அண்மைக்கால அறிவியல் காலக்கணக்கீடுகள்

கா. ராஜன்

இரா. சிவானந்தம்

வி.ப. யதீஸ் குமார்

தமிழ்நாடு அரசு

தொல்லியல் துறை

2025

தலைப்பு

தமிழ்நாட்டுத் தொல்லியல் தளங்களின் அண்மைக்கால அறிவியல் காலக்கணக்கீடுகள்

முதல் பதிப்பு : 2025
வெளியீடு எண் : 363
பிரதிகளின் எண்ணிக்கை : 2000
பக்கங்களின் எண்ணிக்கை : 112

© **தொல்லியல் துறை, தமிழ்நாடு அரசு**

நூலாசிரியர்கள்

கா. ராஜன்

இரா. சிவானந்தம்

வி.ப. யதீஸ் குமார்

வெளியீட்டாளர்

தொல்லியல் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை – 600008

நூல் வடிவமைப்பாளர்

ந. இரவிச்சந்திரன், nravi1963@gmail.com

அச்சிட்டோர்

சென்னை பிரிண்டிங் மற்றும் ஸ்டேஷனரி தொழிலாளர்கள்
தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட், 10, சரவணா தெரு,
கொண்டித்தோப்பு, சென்னை - 600079.

விலை: ரூ.200.00

ISBN : 978-81-977842-4-8

திரு. தங்கம் தென்னரசு

மாண்புமிகு நிதி அமைச்சர்

சுற்றுசூழல் காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல் துறை

அணிந்துரை

வரலாற்றை எழுதுவது என்பது கடந்த காலத்தைக் காலவரிசைப்படுத்தும் ஒரு நிகழ்வாகும். கடந்த கால வரலாற்றை மறுசீரமைப்பு செய்வதில் கல்வெட்டுகள், செப்பேடுகள் போன்ற முதன்மைச் சான்றுகளில் காணப்படும் காலம் குறித்த செய்திகள் துல்லியமாக காலக்கணக்கீடு செய்வதற்கு பெரிதும் துணைபுரிகின்றன. ஆனால் எழுத்துச் சான்றுகள் இல்லாத காலக்கட்டங்கள் அல்லது எழுத்து முறை தோன்றுவதற்கு முந்தைய காலங்கள் ஆகியவற்றின் பண்பாட்டுக் கூறுகளை எடுத்துரைக்க பெரும்பாலும் தொல்லியல் சான்றுகளே துணை செய்கின்றன. இந்தியாவில் தொல்லியல் ஆய்வுகள் ஒப்பீட்டு காலக்கணக்கு முறைகளைப் பயன்படுத்தி, குறிப்பாக பானைகள், எழுத்து வரிவடிவங்கள், மண்ணடுக்குகள் (stratigraphy) ஆகியவற்றின் அடிப்படையில், காலக்கணக்கீடுகள் செய்யப்பட்டு வந்தன. இம்முறைகள் கடந்த கால பண்பாட்டு நிகழ்வுகளின் தொடர்ச்சியை எடுத்துரைத்தாலும், துல்லியமான காலத்தைக் கணிக்க இயலாத ஒன்றாக இருந்தது. இதனால் வரலாற்றின் பல கால நிலைகள் ஒரு சரியான வரையறையின்றி இருந்தன. இந்தச் சவால்களுக்கு விடையளிக்கும் வகையில், வரலாற்றை அதிகமான நம்பகத்தன்மையுடனும் துல்லியத்துடனும் மாற்றி எழுதுவதற்காக, அறிஞர்கள் அறிவியல் அடிப்படையிலான துல்லியமான காலக்கணக்குகளைக் கருவியாகக் கொண்டனர். அவ்வகையில், தமிழ்நாட்டு வரலாற்றைக் காலவரயறை செய்யும் பணியில் அண்மைக்காலமாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை முக்கிய பங்காற்றி வருகிறது. அம்முயற்சியின் பலனாக பல்வேறு வரலாற்று நிகழ்வுகளின் காலவரிசையை தெளிவுபடுத்துவதில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது.

“தமிழ்நாட்டுத் தொல்லியல் தளங்களின் அண்மைக்கால அறிவியல் காலக்கணக்கீடுகள்” என்ற இந்நூல், வரலாற்று தரவுகளில் காணும் காலவரிசையில் ஏற்படும் நிலையற்ற தன்மையில் இருந்து விடுதலை அளிக்கிறது. கரிம கதிரியக்கக் காலக்கணக்கீடு, தூண்டொளி ஒளிர்வு காலக்கணக்கீடு (Accelerator Mass Spectrometry – AMS, Optically Stimulated Luminescence – OSL) போன்ற காலக் கணக்கீடுகள் தமிழ்நாட்டின் தொன்மையை வெளிப்படுத்துவதுடன் இந்திய துணைக்கண்டத்திற்கு இவ்வாய்வுகள் முன்மாதிரியாக திகழ்கின்றன. இந்நூல், தமிழ்நாட்டுத்

தொல்லியல் ஆய்வில் நிகழ்ந்த அறிவியல் தாக்கத்தின் முக்கிய சான்றாக விளங்குகிறது. இந்நூலில் வழங்கப்பட்டுள்ள வலுவான சான்றுகள் தமிழ்நாட்டின் வரலாற்றை மறுவடிவமைப்பதோடு மட்டுமல்லாமல், இந்திய துணைக்கண்டத்தின் தொல்லியல் ஆய்வுகளில் புதிய முறைமையியல் தரத்தையும் நிறுவியுள்ளது.

இங்கு முன்வைக்கப்பட்டுள்ள ஆய்வு முடிவுகள், அதன் சிறப்பான மற்றும் முறையான கட்டமைப்பின் காரணமாகத் தனித்துவம் பெறுகிறது. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மேற்கொண்ட அண்மைக்கால அகழாய்வுகள் முறையற்ற தேடல்களாக அல்லாமல், தமிழ்நாட்டின் நீண்ட வரலாற்றில் நீடித்திருந்த பெரும் வெற்றிடத்தை நிரப்பும் தொலைநோக்கு பார்வையுடன் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் விளைவாக, மொத்தம் 124 அறிவியல் காலக்கணக்கீடுகள் கொண்ட தரவுகளின் தொகுப்பாக உருவாகியுள்ளது. இத்தரவுகள் பன்னாட்டளவிலான பல முன்னணி ஆய்வுக்கூடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலமும், முக்கியத் தொல்லியல் தளங்களில் கிடைத்த மாதிரிகளை பல்வேறு முறை காலக்கணக்கீடுகளால் ஒப்பீடு செய்து சரி செய்யப்பட்டதன் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு மிக நுணுக்கமாக அமைக்கப்பட்ட அணுகுமுறை, இவ்வறிக்கையில் வைக்கப்பட்ட வாதங்கள் அனைத்தும் பல கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் உறுதியாக நிறுவப்பட்டுள்ளது.

இந்த புதிய காலவரிசையின் விளைவுகள் உலகளாவிய அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்திரம்பாக்கத்தில் மனிதன் வாழ்ந்த காலம் 17 லட்சம் முதல் 10.7 லட்சம் ஆண்டுகளுக்கு உட்பட்டது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இது “ஆப்பிரிக்காவிலிருந்து மனிதப் பரவல்” என்ற மனித பரவல் ஈன்ற கோட்பாட்டினை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்துகிறது. அதேபோன்று, சிவகளையில் கிடைத்த காலக்கணக்கீடுகள், இரும்பின் பயன்பாட்டை கி.மு. நாலாயிரம் ஆண்டுகளுக்கு கொண்டு செல்வதன் மூலம், இரும்பு தொழில்நுட்ப வளர்ச்சி மேற்கில் இருந்து கிழக்கிற்கும், வடக்கில் இருந்து தெற்கிற்கும் பரவியது என்ற கருதுகோள்களை (hypotheses) முற்றிலும் கேள்விக்குள்ளாக்குகின்றன. இவை தென்னிந்திய இரும்பு தொழில்நுட்பத்தில் புரட்சியை ஏற்படுத்தியதில் மையமாக இருந்தது என்பதும் வடஇந்தியச் செப்புக்கால பண்பாட்டு காலத்திற்குச் சமகால பண்பாடு என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

இந்தப் பணியானது அளவிலா அர்ப்பணிப்பின் வெளிப்பாடாகும். ஆசிரியர்கள் கா. ராஜன், இரா. சிவானந்தம் மற்றும் வி.ப. யதீஸ் குமார், மற்றும் தமிழ்நாடு அரசு தொல்லியல் அலுவலர்களும், துறையினரும் தொலைநோக்குடனும், அறிவியல் திறனுடனும், பற்றற்ற அர்ப்பணிப்புடனும் ஆற்றிய பங்களிப்பை மனதார நான் பாராட்டுகிறேன். இவ்வாய்வியல் முடிவுகளை வெளியிடுவதன் மூலம், வருங்கால ஆய்வாளர்களுக்கு தென்னிந்தியாவின் வரலாற்றை துல்லியமாக கட்டமைக்க ஒரு வலிமையான அடித்தளத்தை அமைத்துள்ளனர் என்றால் மிகையாகாது.

த. உதயச்சந்திரன் இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர்/ஆணையர் (மு.கூ.பொ)
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

அணிந்துரை

தென்னிந்தியாவின் கடந்தகால வரலாற்று ஆய்வுகள் நமக்கு நீண்டகாலமாகத் தீர்க்கப்படாத காலவரிசை தொடர்பான சிக்கல்கள், சமூகத் தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பான செய்திகள் ஆகியன குறித்து மிகக்குறுகிய அளவிலான புரிதலையே நமக்கு தருகின்றன. இரும்புத் தொழிட்நுட்பம் எத்தனை ஆண்டுகள் தொன்மையானது, எழுத்தறிவு மற்றும் நகரமயமாக்களின் தோற்றம் எப்போது ஏற்பட்டது போன்ற விவாதங்கள் பல காலங்களாக நீடித்து வருகின்றன. ஒப்பீட்டுக் காலக்கணக்கீடுகளின் வழி பெறப்பட்ட காலவரையறை இவ்விவாதங்களுக்கு பெரும்பாலும் தடையாக இருந்துள்ளன. இந்நூல் இத்தகைய அடிப்படை கேள்விகளுக்கு நேரடியாக பதில் அளிக்கும் வகையில் அறிவியல்ரீதியான உறுதியான தரவுகளை வழங்கி, குறிப்பிடத்தக்க ஆய்வுப் பங்காற்றியுள்ளது.

முதலில் “தமிழ்நாட்டுத் தொல்லியல் தளங்களின் அண்மைக்கால அறிவியல் காலக்கணக்கீடுகள்” என்ற இந்நூல் இந்திய துணைக் கண்டத்தில், இரும்பின் தொன்மையை உறுதியான சான்றுகளுடன் நிலை நாட்டுகின்றது. சிவகளை இரும்புக்கால தொல்லியல் தளத்தில் கிடைக்கப் பெற்ற கரிமகதிரியக்க (Accelerator Mass Spectrometry – AMS) மற்றும் தூண்டொளி ஒளிர்வு (Optically Stimulated Luminescence – OSL) காலக் கணக்கீடுகள் இரும்பின் தோற்றத்தை கி.மு. 3345 ஆம் ஆண்டுக்கு கொண்டு செல்கின்றது என்பது பெரிய பண்பாட்டு மாற்றத்திற்குரிய ஒன்றாகும். இந்த அறிவியல் சான்று, தென்னிந்திய இரும்புக்காலமும், வடஇந்தியச் செப்புக்காலமும் சமகாலப் பண்பாடுகள் என்பதைத் தெளிவாக நிறுவுகிறது. இதனால், இதுவரை நிலவிய கருதுகோள்கள் (hypotheses) கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன. மேலும், இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஒரே காலத்தில், வெவ்வேறு தனித்தன்மை பெற்ற பன்முகத் தொழில்நுட்பப் பண்பாடுகள் உருவாகியிருக்கலாம் என்ற சிக்கலான கருத்தையும் வெளிப்படுத்துகிறது. இது இந்திய வரலாற்று முந்தய காலத்திற்கு அளவிட முடியாத முக்கியத்துவம் வாய்ந்த முடிவாகும்.

இரண்டாவது, இந்த காலக்கணக்கீடுகள் எழுத்தறிவு மற்றும் நகரமயமாக்கலின் தோற்றத்திற்கான உறுதியான காலவரிசையை நமக்கு அளிக்கின்றன. கீழடி, சிவகளை, கொடுமணல் போன்ற

தொல்லியல் தளங்களில் கண்டெடுக்கப்பட்ட தமிழி (தமிழ்-பிராமி) எழுத்து பொறிப்புகளுக்கான விரிவான கதிரியக்க காலக்கணக்கீட்டுத் தரவுகள், தமிழி எழுத்தின் தோற்றத்தை கி.மு. 7–6ஆம் நூற்றாண்டுகளில் நிலைநிறுத்துகின்றன. இத்தரவின் அடிப்படையில், தண்பொருநை (தாமிரபரணி), வைகை மற்றும் காவிரி ஆற்றுப் பள்ளத்தாக்குகளில், எழுத்தறிவு மற்றும் நகரமயமாக்கல் ஆகியன மௌரிய அரசு காலத்திற்கு முந்தையது என்பதும், கங்கை சமவெளியில் எழுந்த மகாஜனபத அரசுகளின் சம காலத்தைச் சார்ந்தது என்பதும் தெளிவாகிறது. இந்தக் காலக்கணக்கீடுகள், தென்னிந்தியாவில் அரசுருவாக்கம் பிற்காலத்தில் தோன்றியது என்ற கருத்தை மறு ஆய்வு செய்யும் அவசியத்தை வலியுறுத்துகிறது. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அடுத்த கட்ட அகழாய்வை முன்னெடுக்கும் முன்பே, கடந்த அகழ்வாய்வுக்கான கண்டுபிடிப்புகளை அறிக்கைகளாக வெளியிடுவதன் மூலம் இத்துறை ஆய்வில் வெளிப்படைத் தன்மை கொண்டுள்ளதை காணமுடிகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட அறிவியல் காலக்கணக்கீடுகளை ஒருங்கிணைத்துள்ள இந்நூல் அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். தென்னிந்திய தொல்லியல் ஆய்வுகளின் மிக முக்கியமான கேள்விகளுக்கு அறிவியல் அடிப்படையில் விடை தரும் அடித்தளத் தரவுத் தொகுப்பாக இது அமைகிறது. எதிர்வரும் காலங்களில் இத்துறையில் ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கு எளிதாக அணுகக்கூடிய வடிவில் வழங்கியதற்காக நூலாசிரியர்கள் கா. ராஜன், இரா. சிவானந்தம் மற்றும் வி.ப. யதீஸ் குமார் ஆகியோருக்கு பாராட்டுகளையும் அவர்கள் பணி சிறக்க வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளடக்கம்

அணிந்துரை

அறிவியல் காலக்கணக்கீடுகள் *1*

அட்டவணை *1*: தமிழ்நாடு தொல்லியல் தளங்களில் பெற்ற கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் *41*

அட்டவணை *2*: தமிழ்நாடு தொல்லியல் தளங்களில் பெற்ற தூண்டொளி ஒளிர்வு காலக்கணக்கீடுகள் *51*

அட்டவணை *3*: தமிழ்நாடு புதியகற்காலத் தொல்லியல் தளங்களில் பெற்ற கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் *52*

அட்டவணை *4*: சென்னானூர் தொல்லியல் தளத்தில் பெற்ற கரிமக் கதிரியக்க மற்றும் தூண்டொளி ஒளிர்வு காலக்கணக்கீடுகள் *53*

அட்டவணை *5*: தமிழ்நாடு இரும்புக்காலத் தொல்லியல் தளங்களில் பெற்ற கரிமக் கதிரியக்க மற்றும் தூண்டொளி ஒளிர்வு காலக்கணக்கீடுகள் *54*

அட்டவணை *6*: ஆதிச்சநல்லூர் தொல்லியல் தளத்தில் பெற்ற கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் *57*

அட்டவணை *7*: சிவகளை தொல்லியல் தளத்தில் பெற்ற கரிமக் கதிரியக்க மற்றும் தூண்டொளி ஒளிர்வு காலக்கணக்கீடுகள் *59*

அட்டவணை *8*: தமிழ்நாட்டில் தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள் கிடைக்கும் தொடக்க வரலாற்றுக்கால தொல்லியல் தளங்களுக்கான கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் *60*

அட்டவணை *9*: கீழடி தொல்லியல் தளத்தின் கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் *67*

அட்டவணை *10*: கொடுமணல் தொல்லியல் தளத்தின் கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் *70*

அட்டவணை *11*: வெம்பக்கோட்டை தொல்லியல் தளத்தின் கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் *71*

நூற்பட்டியல் *73*

பிற்சேர்க்கை *79*

ஒளி மற்றும் விளக்கப்படங்களின் அட்டவணை

ஒளிப்படங்கள்

படம் 1: அறிவியல் காலக்கணக்கீடுகளுடன் கூடிய தொல்லியல் தளங்கள்
படம் 2: கீழைப் பழங்கற்காலக் கருவிகள்
படம் 3 இடைப் பழங்கற்காலக் கருவிகள்
படம் 4: மேலைப் பழங்கற்காலக் கருவிகள்
படம் 5: நுண்கற்காலக் கருவிகள்
படம் 6: புதிய கற்காலக் கருவிகள் செய்யும் தொழிற்கூடத் தளங்கள்
படம் 7: புதிய கற்காலத் தொல்லியல் தளங்கள்
படம் 8: சிவகளை : இரும்புக்கால ஈமத்தாழிகள் மற்றும் தொல்பொருட்கள்
படம் 9: இரும்புக்கால ஈமத்தாழிகள்
படம் 10: இரும்புக்கால கற்பதுக்கைகள்
படம் 11: தமிழி (தமிழ்-பிராமி) பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்
படம் 12: தொடக்க வரலாற்றுக் கால தொல்பொருட்கள்

விளக்கப்படங்கள்

விளக்கப்படம் 1: அறிவியல் காலக்கணக்கீடுகளின் அடிப்படையில், தமிழ் நாட்டின் பண்பாட்டுக்கால வரையறை
விளக்கப்படம் 2: அறிவியல் காலக்கணக்கீடுகளின் அடிப்படையில், தமிழ் நாட்டின் பண்பாட்டுக்காலங்கள்
விளக்கப்படம் 3: இரும்புக்கால மற்றும் பழங்கற்காலத் தொல்லியல் தளங்களின் தூண்டொளி ஒளிர்வு காலக்கணக்கீடுகள்
விளக்கப்படம் 4: புதிய கற்காலம் மற்றும் புதிய கற்கால - நுண்கற்கால மாற்றல் நிகழ்கால நிலை
விளக்கப்படம் 5: அறிவியல் காலக்கணக்கீடுகளுடன் கூடிய தமிழ் நாட்டின் புதிய கற்காலத் தொல்லியல் தளங்கள்
விளக்கப்படம் 6: தமிழ் நாட்டின் இரும்புக்காலத் தொல்லியல் தளங்கள்
விளக்கப்படம் 7: சிவகளையின் இரும்புக் காலத்திற்குரிய கரிமக் கதிரியக்க மற்றும் தூண்டொளி ஒளிர்வு காலக்கணக்கீடுகள்
விளக்கப்படம் 8: இரும்புக்காலம் மற்றும் இரும்புக்கால – தொடக்க வரலாற்றுக் கால மாற்றல் நிகழ்கால நிலையின் அறிவியல் காலக்கணக்கீடுகள்
விளக்கப்படம் 9: இரும்புக்கால – தொடக்க வரலாற்றுக் கால மாற்றல் நிகழ்கால நிலை மற்றும் தொடக்க வரலாற்றுக் காலத்தின் கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள்
விளக்கப்படம் 10: தொடக்க வரலாற்றுக் காலத்தின் கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள்
விளக்கப்படம் 11: கொடுமணல் - தொடக்க வரலாற்றுக் காலத் (சங்க காலம்) தொல்லியல் தளத்தின் கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள்
விளக்கப்படம் 12: கீழடி - தொடக்க வரலாற்றுக் காலத் (சங்க காலம்) தொல்லியல் தளத்தின் கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள்
விளக்கப்படம் 13: காஸ்மோஜெனிக் நியூகிளைட், தொல்காந்தவியல் அளவுகள், ஒளிர்வியல், தூண்டொளி ஒளிர்வு மற்றும் கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகளின் அடிப்படையில் தமிழ் நாட்டின் பல்வேறு பண்பாடுகளின் கால வரையறை
விளக்கப்படம் 14: அறிவியல் காலக்கணக்கீடுகளின் அடிப்படையில் பல்வேறு பண்பாடுகளின் கால வரையறை

அறிவியல் காலக்கணக்கீடுகள்

தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வுகளில், கடந்த காலத்தை மறுகட்டமைப்பதில் காலவரிசைப்படுத்தப்பட்ட தரவுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தொல்லியல் அல்லது வரலாற்று ஆவணத்தின் ஒவ்வொரு பதிவும், அதன் உள்ளடக்கம் மற்றும் சூழல் அடிப்படையில் துல்லியமாக அல்லது ஒப்பீட்டளவில் கால வரையறை செய்யப்படுகின்றன. கல்வெட்டுகள், செப்பேடுகள், பனை ஓலைச் சுவடிகள் முதலான வரலாற்று ஆவணங்களில் காணப்படும் ஆட்சி ஆண்டு மற்றும் சகாப்தங்கள் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு துல்லியமாகக் காலக்கணக்கீடு செய்யப்படுகிறது. துல்லியமான காலக்கணக்கீடு கிடைக்கப்பெறாதபோது, ஒப்பீட்டளவிலான காலக்கணக்கீடு முறைகளைப் பயன்படுத்தி அதன் காலம் தோராயமாக உறுதி செய்யப்படுகிறது. இக்காலக்கணக்கீடுகள் பெரும்பாலும் தொல் எழுத்தியல், மொழியியல், வரலாற்றுக் குறிப்புகள், ஆவணம் உருவான சூழல் ஆகியவற்றை சார்ந்து உள்ளன. தொடக்க காலத்தில், தமிழிக் (தமிழ்-பிராமி) கல்வெட்டுகள் பெரும்பாலும் தொல் எழுத்தியலை அடிப்படையாகக் கொண்டு காலவரையறை செய்யப்பட்டன. அதே வழியில், தொல்லியல் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட பெரும்பாலான தொல்பொருட்கள், குறியீடு பொறித்த பானை ஓடுகள் முதலானவை, தொல் மண்ணடுக்குகளின் அடிப்படையிலேயே காலவரையறை செய்யப்பட்டன. தமிழிக் கல்வெட்டுகளில் ஜம்பை தமிழிக் கல்வெட்டு வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் காலம் உறுதிசெய்யப்பட்டது. அதேபோல், பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் ஆண்டு குறிக்கப்பட்டிருந்தாலும் அவ்வாண்டின் தெளிவான சகாப்தம் குறிப்பிடப்படாததன் காரணமாக அறிஞர்கள் இரண்டு வெவ்வேறு காலங்களை முன்மொழிந்தனர். எனவே, ஒப்பீட்டுக் காலக்கணக்கீட்டு முறையானது அதனின் நிலையற்ற அல்லது உறுதியற்ற தன்மை காரணமாக எப்போதும் இரண்டாம் நிலை செயல்பாடாகவே கருதப்படுகிறது. துல்லியமான ஆண்டுக் குறிப்புடன் கூடிய ஆவணங்கள் கிடைக்கும் பொழுது அதன்வழி கடந்த காலத்தை மறு கட்டமைப்பு செய்வது மிகவும் எளிதானது. எனினும், படித்து அறியப்பட்ட எழுத்துகளைக் கொண்ட வரலாற்று ஆவணங்கள் மட்டுமே காலவரையறை செய்ய உதவும். எடுத்துக்காட்டாக, சிந்துவெளி முத்திரைகளில் உள்ள எழுத்துகளைப் படித்து அறியாத காரணத்தினால் சிந்துவெளிப் பண்பாட்டில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகளை முறையாக விளக்குவது கடினமானதாக உள்ளது.

இந்தியாவில் ஏறத்தாழ 17 இலட்ச ஆண்டுகால மனித இனம் தோன்றியது. அன்றிலிருந்து, தொடக்க வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய காலம் வரை மனித சமுதாயம் தனது சக மனிதர்களுடன் எழுத்து வரிவடிவ பரிமாற்றம் இன்றி வாய்மொழி வழியாக அல்லது பேச்சு மொழியாக, தொடர்பு கொண்டிருந்தனர். இருப்பினும், 5000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய சிந்துவெளி வரிவடிவமும், கீறல் குறியீடுகளும் தான் நமக்குக் கிடைக்கப்பெறுகின்ற தொன்மையான வரிவடிவங்கள் ஆகும். எனவே, 17 இலட்சம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட இந்திய வரலாற்றை மறுகட்டமைப்பு செய்வது, என்பது தொல்லியல் ஆய்வாளர்களும் வரலாற்று ஆய்வாளர்களும் எதிர் கொள்ளும் மிகப்பெரிய சவால்கள் ஆகும் (விளக்கப்படம் 1). எழுத்து ஆவணங்கள் கிடைக்கப்பெறாமை, சிந்துவெளி வரிவடிவங்களையும், கீறல் குறியீடுகளையும் படித்து அறியாத காரணத்தினால், ஒரு குறிப்பிட்ட காலத்தின் வரலாறு இன்றுவரை அறியப்படாமல் உள்ளது. 1837-ஆம் ஆண்டு ஜேம்ஸ் பிரின்செப்

விளக்கப்படம் 1: அறிவியல் காலக்கணக்கீடுகளின் அடிப்படையில், தமிழ் நாட்டின் பண்பாட்டுக்கால வரையறை

என்பவர் பிராகிருத-பிராமி எழுத்துகளையும், 1924 ஆம் ஆண்டில் கே. வி. சுப்ரமண்யம் தமிழி எழுத்துகளையும் (தமிழ்-பிராமி) படித்தறிந்த காரணத்தினால், இந்தியாவின் தொடக்க வரலாற்றுக் காலத்தினை கால வரிசையில் எழுதுவது எளிதாகியது. தொல் வரிவடிவங்களை படித்தறிந்த போதிலும் பண்டைய கல்வெட்டுகளில் எவ்வித வரலாற்றுக் குறிப்புகளும் இல்லாதபொழுது, பிராமிக் கல்வெட்டுகளை காலவரையறை செய்ய, அறிஞர்கள் தொல் வரிவடிவங்களின் எழுத்தமைதியைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தொடக்க கால பிராமிக் கல்வெட்டுகளான அசோக மன்னனின் பாறைக்கல்வெட்டுகளில் பெறப்பட்ட தெளிவான வரலாற்றுக் குறிப்புகள் பிராமி எழுத்தை கி.மு.மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த வரிவடிவம் என்று உறுதி செய்ய அறிஞர்களுக்கு பெரிதும் உதவின. தமிழ்நாட்டில் அகழாய்வு செய்யப்பட்ட இடங்களில் சேகரிக்கப்பட்ட 1600க்கும் மேற்பட்ட தமிழி (தமிழ்-பிராமி) எழுத்துப்பொறிப்பு பெற்ற மட்பாண்ட ஓடுகள், அவை கிடைக்கப்பெறுகின்ற மண்ணடுக்குகளின் வாயிலாக அவற்றின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பரவல் பற்றிய விவாதத்தை உருவாக்கியது. இந்த காலவரையறை தொடர்பான விவாதம் பிராகிருத-பிராமி மற்றும் தமிழி எழுத்துகளின் காலத்தை உறுதி செய்ய அறிவியல் முறைகளைத் தேட வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தியது. கொடுமணல், கீழடி, சிவகளை போன்ற தொல்லியல் தளங்களில் பெறப்பட்டுள்ள கரிமக் கதிரியக்கக் (AMS) காலக்கணக்கீடுகளைக் கொண்டு தமிழி எழுத்துகளின் காலம் கி.மு. 7-6 ஆம் நூற்றாண்டு என்று வரையறுக்கப்பட்டது. எனவே, காலப்போக்கில் தொல்லியல் ஆய்வுகளில் பெறப்பட்ட அறிவியல் காலக்கணக்கீடுகள் சில சிக்கலான இடர்பாடுகளை தீர்த்து வைத்தன, அதே நேரம் தீர்த்து வைக்கப்பட்ட சில இடர்பாடுகளை மீளாய்வு செய்யத் தூண்டின.

அண்மைக்காலங்களில், அறிவியல் காலக்கணக்கீடுகள் தொல்லியல் ஆய்வின் ஒருங்கிணைந்த பகுதியாகவே மாறிவிட்டது. எனவே, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, தொல் பொருள்களுக்கான அறிவியல் காலக்கணக்கீடுகளைப் பெறுவதற்கு பெரும் முயற்சிகளை எடுத்தது. இம் முயற்சிகளின் காரணமாக வரலாற்றுக்கு முந்தைய காலம் (prehistory), வரலாற்றுதயக்காலம் (proto-history), இரும்புக் காலம் மற்றும் தொடக்க வரலாற்றுக்காலம் ஆகியவற்றிற்கு அறிவியல் அடிப்படையிலான காலக்கணக்கீடுகளை பெற முடிந்தது. இதுவரை கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் (AMS-127), தூண்டொளி ஒளிர்வு காலக்கணக்கீடுகள் (OSL-11), காஸ்மோஜெனிக் நியூக்லைடு கணக்கீடு (Cosmogenic Nuclide Dating-1) ஆகிய கணக்கீடுகள் மூலம் 139 மாதிரிகளுக்கு அறிவியல் காலக்கணக்கீடுகள் பெறப்பட்டுள்ளன (அட்டவணை 1, 2 மற்றும் 11; படம் 1). இந்த அறிவியல் காலக்கணக்கீடுகள் ஒரு குறிப்பிட்ட நிலவியல் பகுதிக்கு உட்பட்டே பெறப்படுவதாலும், பண்பாட்டு வளர்ச்சி வெவ்வேறு நிலையில் ஏற்படுவதாலும், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பண்பாட்டு வளர்ச்சி நிலைகளை ஒரு கால எல்லைக்குள் வரையறை செய்வது மிகக்கடினமான பணியாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுக் காலத்தைக் குறிக்க பயன்படுத்தப்பட்ட சொல்லாடல் தெளிவின்மை அற்று இருந்த காரணத்தினால் அவையும் விவாதத்துக்கு உள்ளானது. தொல்பழங்காலத்தை கீழ், இடை மற்றும் மேல் பழங்கற்காலம் எனவும் அதைத் தொடர்ந்து நுண்கற்காலம் மற்றும் புதிய கற்காலம் எனக் காலப்பாகுபாடுகள் செய்யப்படுகிறது (விளக்கப்படம் 2). அண்மைக்காலங்களில் ஒவ்வொரு பண்பாட்டு நிலைக்கும் வரையறுக்கப்படும் ஒரே சீரான தொடர் கால அளவுகளும் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. பரந்துபட்ட நிலப்பரப்பில் காணப்படும் பல்வேறு நிலவியல்

தொல்லியல் தளங்களில் அறிவியல் காலக்கணக்கீடுகள்



படம் 1: அறிவியல் காலக்கணக்கீடுகளுடன் கூடிய தொல்லியல் தளங்கள்



விளக்கப்படம் 2: அறிவியல் காலக்கணக்கீடுகளின் அடிப்படையில், தமிழ் நாட்டின் பண்பாட்டுக்காலங்கள்

கூறுகளின் காரணத்தால் அதன் நிலவியல் தன்மைக்கு ஏற்றவாறு வெவ்வேறு நிலைத்தன்மை கொண்ட பண்பாட்டு வளர்ச்சி காணப்படுவதால், அனைத்து பண்பாட்டு வளர்ச்சிகளையும் ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் கொண்டுவர இயலவில்லை. இன்று போலவே அன்றும், ஒவ்வொரு காலகட்டத்திலும் நன்கு வளர்ச்சி பெற்ற பண்பாடும், வளர்ச்சியில் பின்தங்கிய அல்லது நன்கு முதிர்ச்சி பெறாத பண்பாடும் சமகாலக்கட்டத்தில் ஒரே நேரத்தில் இருந்துள்ள காரணத்தால் ஒரு நிலையான காலத்தை வரையறை செய்வதைச் சிக்கலாக்கியது. குறிப்பாக, சிந்துவெளிப் பண்பாடு நிலவிய பகுதிகளில் அனைத்து வகைகளிலும் அச்சமூகம் ஒரு முன்னேறிய நாகரிகத்தை அடைந்திருந்த அதே காலகட்டத்தில், இந்தியாவின் பிற பகுதிகளில் சில சமூகங்கள் தொடக்க கால உணவு உற்பத்தி முறை வாழ்க்கையிலேயே இருந்தன. மத்திய இந்தியாவில் செப்புக் காலம் நிலவிய போது தென் இந்தியாவில் புதிய கற்காலப் பண்பாடு நிலவியதை அதற்குச் சான்றாக கூறலாம். சில சமூகங்களின் வாழ்க்கை முறை அடிப்படை நிலையிலேயே இருந்துள்ளது. எனவே, அனைத்து நிலவியல் மண்டலங்களிலும் ஒரே மாதிரியான வாழ்க்கை நிலையும், பண்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சியும் இருந்தது என எதிர்பார்ப்பது பொருத்தமற்றது. ஒவ்வொரு நிலவியல் அமைப்பில் கிடைக்கும் வளங்களின் தன்மை, அவ்வளங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு அறிந்திருந்த தொழில்நுட்ப நிலை அல்லது வளங்களைத்தங்களுக்குச்சாதகமாக மாற்றிக் கொள்ளும் திறன் போன்றவையே பண்பாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன. ஆதலால், ஒவ்வொரு பண்பாட்டுக் கூறுகளையும் காலவரிசைப்படி மற்றும் சூழலியல் அடிப்படையில் புரிந்து கொள்வது மிக முக்கியமானது. அதற்கு, அறிவியல் காலக்கணக்கீடுகள் மிகவும் முக்கியமாகத் தேவைப்படும் காரணிகளில் ஒன்றாகத் திகழ்கின்றன. தமிழ்நாட்டில் ஒவ்வொரு பண்பாட்டு வளர்ச்சியும் நீண்ட வரலாற்றைப் பெற்றுள்ளது. எனவே, அறிவியல் காலக்கணக்கீடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு பண்பாட்டின் தனித்தன்மையை புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

இந்தியப் பண்பாட்டு வரலாற்றுச் சூழலில், வரலாற்றுக்கு முந்தைய காலம் (தொல் பழங்காலம்) மற்றும் தொடக்க வரலாற்றுக்காலம் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட பண்பாட்டுக் காலத்தை விவரிக்க வரலாற்றுதயக்காலம் *(proto-history)* என்ற சொல்லாடல் பயன்படுத்தப்படுகிறது. வரலாற்றுதயக்காலம் என்பது சிந்துவெளிப் பண்பாட்டின் வெண்கலக் காலம், மத்திய இந்தியாவின் செப்புக்காலம் மற்றும் தென்னிந்தியாவின் இரும்புக்காலம் ஆகியவற்றை உள்ளடக்கியது. ஏறத்தாழ கி.மு. 4-ஆயிரம் முதல் கி,மு. 700 -600 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு உட்பட்டதாக இவை அமைகின்றன. சி.ஜெ. தாம்செனின் முக்காலக் கொள்கையின் அடிப்படையில் இரும்புக்காலம் என்பது செப்பு காலத்தைத் தொடர்ந்து வந்ததாகக் கருதப்பட்டது. ஆனால், மண்ணடுக்குகள் அடிப்படையிலான காலக்கணக்கீடுகள் மற்றும் கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் இந்தக் கூற்றைக் கேள்விக்கு உள்ளாக்குகின்றன. மேலும் இக்காலக்கணக்கீடுகள் இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும் இருக்கலாம் எனவும் எடுத்துரைக்கின்றன. சில இடங்களில் நுண்கற்காலத்தை அடுத்து செப்புக்காலமும், சில இடங்களில் நுண்கற்காலத்தை அடுத்து புதியகற்காலமும், வேறு சில இடங்களில் நுண்கற்காலத்தை அடுத்து இரும்புக்காலமும் காணப்படுகின்றன. மேலும், வேறு சில இடங்களில் முழுவதுமாகச் செப்புக்காலப் பண்பாடு அல்லது புதிய கற்காலப் பண்பாடு இன்றிக் காணப்படுகின்றன. எனவே ஒவ்வொரு பண்பாடும் வெவ்வேறு காலம் மற்றும் சூழலியல் அடிப்படையில் உருவாகி மாற்றம் அடைந்துள்ளதை

உறுதிசெய்கின்றது. ஆகவே, ஒட்டு மொத்த பண்பாட்டுக் காலத்தை உள்வாங்கிக்கொண்டு ஒவ்வொரு வட்டாரத்தின் பண்பாட்டையும், தனித்தனியாக ஆய்வு செய்ய வேண்டும் என்பதை அண்மைக்காலத் தொல்லியல் தரவுகள் வலியுறுத்துகின்றன.

இந்தியாவில் தோன்றிய புத்த, சமண இலக்கியங்கள் மற்றும் சங்க இலக்கியங்கள் மிகத் துல்லியமான காலத்தைத் தராவிட்டாலும் பொதுவான கால வரையறையைத் தருகின்றன. இரண்டாம் நகரமயமாக்கல், அரசு உருவாக்கம், குறுநில மன்னர்கள் மற்றும் புத்த மற்றும் சமண சமயப் பிரிவுகள் ஆகியவற்றின் தோற்றம் தொடக்க வரலாற்றுக் காலமாகவும், அது கி.மு. ஆறாம் நூற்றாண்டு எனவும் கருதப்படுகிறது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த மௌரிய காலக் கல்வெட்டுகளைத் தவிர வேறு கல்வெட்டுகள் கிடைக்காததாலும் மௌரிய காலத்திற்கும் முந்தைய கல்வெட்டுகள் மிகக் குறைவான அளவிலேயே கிடைப்பதாலும் கங்கைச் சமவெளியே தொடக்க வரலாற்றுக் காலத்தின் தோற்றமாகக் கருதப்படுகிறது. மகாஸ்தான், பிப்ரவா மற்றும் சோகௌரா கல்வெட்டுகள் அசோகர் காலக் கல்வெட்டுக்கு முந்தையது என்று கருதப்பட்டாலும் அவற்றின் சரியான காலம் குறித்த விவாதம் இன்று வரை தொடர்கிறது. இந்தியாவின் பிற ஆற்றுப்பள்ளத்தாக்குப் பகுதிகளில் விரிவான கள ஆய்வுகளும் அகழாய்வுகளும் மேற்கொள்ளப்படாத காரணத்தால் இந்தியாவில் தொடக்க வரலாற்றுக்காலம் எப்பொழுது தொடங்கியது என்பது குறித்துத் தெளிவாக அறிந்து கொள்வதில் சிக்கல் காணப்படுகிறது. இருப்பினும் தற்போதுள்ள கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் (AMS) இந்தியாவின் தொடக்க வரலாற்றுக்காலத்தை கி.மு. 7-6 ஆம் நூற்றாண்டிற்குக் கொண்டு செல்கிறது. ஆகவே, ஒவ்வொரு பண்பாட்டு நிலைகளையும், மொத்த இந்தியத் துணைக் கண்டத்தின் பொதுவான கால வரையறைக்குள் உட்படுத்தாமல், அதன் குறிப்பிட்ட நிலவியல் அடிப்படையில் ஆய்வு செய்வது மிக முக்கியமானது. தமிழ்நாட்டில் காணப்படும் பல்வேறு பண்பாட்டு நிலைகளின் சுருக்க விளக்கவுரை இங்கு தரப்பட்டுள்ளது. இது ஒரு நிலையான காலக்கணக்கீட்டினை மேற்கொள்வதில் உள்ள சிக்கல்களை புரிந்து கொள்ள உதவும் என்ற அடிப்படையில் தமிழ்நாட்டுப் பண்பாட்டு நிலைகளின் தன்மை குறித்து இங்கே எடுத்துரைக்கப்படுகின்றது.

பழங்கற்காலம்

அறிவியல் காலக்கணக்கீடுகள் வருவதற்கு முன்னர், கற்கருவிகளை காலக்கணக்கீடு செய்வதென்பது கற்கருவிகளின் தொழிற்நுட்பம் சார்ந்த வகைப்பாட்டியல், அவை எவ்வகை மண்ணடுக்கில் கிடைக்கின்றன என்பதன் அடிப்படையில் ஒப்பீட்டாய்வு செய்யப்பட்டு காலக்கணக்கீடு செய்யப்பட்டன. எடுத்துக்காட்டாக, ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் காணப்படும் ஆற்றுப்படிநிலைகள் (river terraces) ஆகியவற்றின் அடிப்படையில் காலக்கணக்கீடு செய்யப்பட்டன. இந்தியாவில் முதன்முதலாக பழங்கற்காலக் கற்கருவிகள் ராபர்ட் ப்ரூஸ் ஃபூட் என்ற நிலவியல் ஆய்வாளரால் 1863ஆம் ஆண்டு பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பல கண்டுபிடிப்புகள் வெளிக்கொணரப்பட்டன. இது அண்மைக்காலங்களில், குறிப்பாக சாந்தி பப்பு மற்றும் அகிலேஷ் குமார் போன்றோரை தொல்பழங்கால ஆய்விலும், பண்டைய சூழலியலிலும் கவனம் செலுத்தத் தூண்டின. இவர்கள் குறிப்பாக கொற்றலை ஆற்றுப் பள்ளத்தாக்கு (கொசஸ்தலை ஆறு) மற்றும் ஆரணி ஆற்றுப் படுகைகளில் கவனம் செலுத்தினர். இவர்களது ஆய்வுகள்



படம் 2: கீழைப் பழங்கற்காலக் கருவிகள்



விளக்கப்படம் 3: இரும்புக்கால மற்றும் பழங்கற்காலத் தொல்லியல் தளங்களின் தூண்டொளி ஒளிர்வு (OSL) காலக்கணக்கீடுகள்

குவாட்டர்னரி (*Quaternary*) காலத்தின் புவிப்புறவியல், கருவிகள் கிடைக்கும் மண்ணடுக்குச் சூழலியல், தள அமைவிடம், கற்கருவி உருவாக்கும் தொழில்நுட்பம், கீழைப் பழங்கற்காலம் (அச்சுலியன்) மற்றும் இடைப்பழங்கற்காலத்தில் இருந்த தொல் மனிதர்கள் தொடர்பான கருதுகோள் ஆகியவற்றிற்குப் புது விளக்கங்களை அளித்தன. தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையால் பரிகுளம், பட்டறைப்பெரும்புதூர் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் பல புதிய தரவுகளை அளித்து பழங்கற்கால ஆய்விற்கு வெளிச்சம் பாய்ச்சின. அத்திரம்பாக்கம் என்ற இடத்தில் சர்மா மரபு கல்வி மையம் சார்பில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு மற்றும் அதனைத் தொடர்ந்து பழைய பாலாற்றின் பள்ளத்தாக்கு முழுவதும் மேற்கொண்ட கள ஆய்வின் வழியாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் தளங்கள் தொடக்கக்கால ப்ளீஸ்டோசீன் யுகத்தைச் சார்ந்த அச்சுலியன் கற்காலம் முதல் இறுதிக் கால ப்ளீஸ்டோசீன் யுகத்தைச் சார்ந்த நுண்கற்காலப் பண்பாடு வரையிலும் மற்றும் தொடக்ககால ஹாலோசின் பண்பாட்டுக் கூறுகளையும் வெளிப்படுத்தின. கிடைக்கப்பட்ட கற்கருவிகளின் வழியாக இடைப் பழங்கற்காலத்தைச் சார்ந்த தொல் மனிதர்களும் கீழைப் பழங்கற்காலத்தைச் சார்ந்த அச்சுலியன் கால வாழ்விடங்களையே தொடர்ந்து வாழ்ந்து வந்தனர் என்பது தெரியவருகிறது. பழங்கற்கருவிகளின் மீது மேற்கொண்ட $^{26}Al/^{10}Be$ கதிர் வீச்சுக் காலக்கணக்கீடுகள் மற்றும் மண்படிமங்களின் மீது மேற்கொண்ட தொல்காந்தவியல் காலக்கணக்கீடுகள் ஆகியன இக்கற்கருவிகள் தொடக்க கால ப்ளீஸ்டோசீன் காலத்தைச் சார்ந்தவை என உறுதி செய்தன. அதாவது, அச்சுலியன் கற்கருவிகளின் காலம் 1.07 Ma (பத்து இலட்சம் ஆண்டுகள்)க்கும் 1.7 Ma (17 இலட்சம் ஆண்டுகள்)க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தது என்றும், அதன் சராசரி காலம் 1.51±0.07 (15 இலட்சம் ஆண்டுகள்) என்றும் கணக்கிடப்பட்டன (Pappu et.al.2011) (படம் 2). இந்த அறிவியல் காலக்கணக்கீடுகள் கீழைப் பழங்கற்காலக் கருவிகளைச் சரியான கால வரையறைக்குள் வைத்தன. மேலும், பழங்கற்காலத்தைச்சார்ந்த தொல்லியல் தளங்கள் இந்தியாவின் மேற்கு கடற்கரை பகுதிகளில் அதிக அளவில் காணப்படாத காரணத்தினால் ஆப்பிரிக்காவிலிருந்து தெற்காசியப் பகுதிகளுக்கு தொல் மனிதன் பரவினான் என்ற மனிதப் பரவல் கோட்பாட்டையும் கேள்விக்கு உட்படுத்தியது. மேலும், அகச்சிவப்பு தூண்டொளி ஒளிர்வு காலக்கணக்கீடு (*pIR-IRSL-post Infrared-Infrared Stimulated Luminescence*) மூலம் அத்திரம்பாக்கத்தில் கிடைத்த இடைக்கற்கால கருவிகள் 385±64 ka (3,85,000) ஆண்டுகளுக்கும், 172±41 ka (1,72,000) ஆண்டுகளுக்கும் உட்பட்டது எனக் காலகணக்கீடு செய்ததன் மூலம் இந்தியாவில் இடைக்கற்காலத்தின் காலவரையறையை மீளாய்வு செய்யத் தூண்டியது (Akhilesh et al. 2018) (படம் 3).

இடைப் பழங்கற்காலக் கருவிகள், கொற்றலை (பண்டைய பாலாறு) ஆற்றின் பள்ளத்தாக்கை கடந்து அரியலூர் மற்றும் வல்லம் பகுதிகளிலும், தென் தமிழ்நாட்டில் வைகை மற்றும் குண்டாறு பள்ளத்தாக்குகளிலும் கிடைக்கின்றன (Raman 1970; Selvakumar 2007, 2008, 2009; Rajan and Ramji 2009). இந்த மண்ணடுக்குகளின் தூண்டொளி ஒளிர்வு (ஓ.எஸ்.எல்) காலக்கணக்கீடுகள், இடைப் பழங்கற்காலம் 385 ± 64ka முதல் தொடங்கி 172± 41 ka (Akhilesh et.al. 2018) ஆயிரம் ஆண்டுகள் வரை இருந்திருக்கலாம் என்றும் உறுதிப்படுத்துகிறது. மேலும் தூண்டொளி ஒளிர்வு, அகச்சிவப்பு தூண்டொளி ஒளிர்வு மற்றும் காஸ்மோஜெனிக் நியூக்லைடு காலக்கணக்கீடுகள், தமிழ்நாட்டின் கீழை மற்றும் இடைப் பழங்கற்காலத்தின் கால எல்லை வரையறைகளை உறுதி செய்தன. பழங்கற்காலக் கருவிகள் தஞ்சாவூருக்கு அருகில் 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள புனல்குளத்தில் கிடைத்தன.

படம் 3: இடைப் பழங்கற்காலக் கருவிகள்

கருவிகள் கிடைத்த சூழலின் அடிப்படையில் அவற்றின் காலம் 42K (42,000) மற்றும் 80K (80,000) க்கும் இடைப்பட்ட கால இடைவெளியைச் சார்ந்தது எனக் கணிக்கப்பட்டுள்ளது. புனல்குளம் தொல்லியல் தளத்தில் அதன் படிமச் சூழலில் கிடைத்த பழங்கற்கால மற்றும் இடைக் கற்காலக் கருவிகளை தேசிய புவி இயற்பியல் ஆய்வு நிறுவனத்தில் (NGRI-National Geophycical Research Institute) வீ.செல்வகுமாரால் ஆய்வுக்குட்படுத்தி காலக்கணக்கீடுகள் செய்யப்பட்டன (விளக்கப்படம் 3). மேல் நிலையில் கிடைக்கும் நுண்கற்கருவிகளின் காலம் 9.8 ± 1.4 ka எனவும் (9,800), பழங்கற்காலக் கருவிகளுக்குக் கீழே இருந்தவை 80.6 ± 13.8 ka (80,600) எனவும், பழங்கற்காலக் கருவிகளுக்கு மேலே இருந்த படிமங்கள் 42.4 ± 6.3 ka (42,400) எனவும் காலக்கணக்கீடுகள் செய்யப்பட்டன. இவற்றிற்கு இடைப்பட்ட மண்ணடுக்குகளிலிருந்து கிடைத்த கற்காலக் கருவிகள் இடைக்கற்காலத்தைச் சார்ந்தவையாக இருப்பதால் இக்கற்கருவிகளை 42,000 – 80,000 இடைப்பட்ட கால இடைவெளியில் வைக்க இயலும் என்று வீ.செல்வகுமார் கருதுகிறார் (Selvakumar et al, 2017).

தமிழ்நாட்டை ஒட்டிய ஆந்திர மாநிலத்தில் உள்ள சித்தூர் பகுதியில் இடைக்கற்காலத்தை அடுத்த பண்பாட்டுக் காலமான மேலைப் பழங்கற்காலக்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன (படம் 4). அப்பகுதியில் அதிக அளவிலான மேலைப் பழங்கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அதனை ஒட்டி உள்ள எல்லைப் பகுதியான வடதமிழகத்தின் வேலூர் வட்டாரத்தில் சிறிய அளவிலான சான்றுகளே கிடைத்துள்ளன (Kumar 2016). தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இடைப் பழங்கற்காலத்தில் இருந்து மேலைப் பழங்கற்காலம் உருவான பண்பாட்டு மாற்றத்தை இன்னும் அதிக அளவிலான தரவுகளைக் கொண்டு சரியாகப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக, தமிழ்நாட்டின் மேலைப் பழங்கற்காலக் காலத்தின் எல்லையை துல்லியமான அறிவியல் காலக்கணக்கீடுகளைக் கொண்டு உறுதிசெய்ய வேண்டியுள்ளது.

மேலைப் பழங்கற்காலத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் நுண்கற்காலப் பண்பாடு காணப்படுகிறது. இதன் கால எல்லை இன்னும் சரியாக வரையறுக்கப்படவில்லை. எனினும், இது பொதுவாக இறுதிக் கட்ட ஹாலோசின் காலத்திற்கு உட்பட்டதாகக் கருதப்படுகிறது. நுண்கற்காலத்தைச் சார்ந்த தொல்லியல் தளங்கள் தமிழ்நாடு முழுவதும், அதிலும் தென் தமிழ்நாட்டில் அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நுண்கற்காலக் கருவிகள், மேலைப் பழங்கற்காலத்திற்கு அடுத்தபடியாகத் தொடங்கி, புதிய கற்காலம் மற்றும் இரும்புக் காலம் வரை காணப்படுகின்றன. தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள சென்னானூர் தொல்லியல் தளத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் நுண்கற்காலக் காலத்தில் இருந்து புதிய கற்காலக் காலத்திற்கு மாற்றம் பெறுகின்ற மண்ணடுக்கில் மேற்கொள்ளப்பட்ட தூண்டொளி ஒளிர்வு (OSL) காலக்கணக்கீடு அதனின் காலம் 10.47±0.85 (10,700) ஆண்டுகள் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது (படம் 5). இது தமிழ்நாட்டின் நுண்கற்காலக் கட்டத்தின் இறுதி காலநிலையைச் சுட்டுவதாக உள்ளது. வட தமிழ்நாட்டில் நுண்கற்காலப் பண்பாட்டை அடுத்துப் புதிய கற்காலப் பண்பாடும், அதே நேரத்தில் தென் தமிழ்நாட்டில் நுண்கற்காலப் பண்பாட்டிற்குப் பின்பு நேரடியாக இரும்புக் காலமும் காணப்படுகின்றது (விளக்கப்படம் 4). வட தமிழ்நாட்டில் காணப்படும் இந்தக் குறிப்பிடத்தக்க பண்பாட்டு மாற்றம் தென் தமிழ்நாட்டில் இதுவரை காணப்படவில்லை. எனவே, தமிழ்நாட்டின் வெவ்வேறு நிலவியல் மற்றும் பண்பாட்டு வட்டாரங்களில் காணப்படும்

படம் 4: மேலைப் பழங்கற்காலக் கருவிகள்

படம் 5: நுண்கற்காலக் கருவிகள்

நுண்கற்காலத்தின் தொடக்கமும் முடிவும் மேலும் பல அறிவியல் காலக்கணக்கீடுகளின் வழியாகச் சரியாகக் கண்டறியப்படவேண்டி உள்ளது.

புதிய கற்காலம்

தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மிகச்சிறிய அளவிலான கள ஆய்வு மற்றும் அகழாய்வுகளின் காரணத்தினால் தொடக்க கால வேளாண்-கால்நடைமேய்ப்புச் சமூகங்கள் பற்றிக் குறைந்த அளவிலான தகவல்களே உள்ளன. இருப்பினும், தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய கற்காலக்கருவிகளை உருவாக்கும் தொல்லியல் தளங்களான கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள கப்பலவாடி, வரட்டனப்பள்ளி மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள கீழ்நமண்டி போன்ற இடங்களும், நீர் ஊற்றுகளின் அருகே புதிய கற்காலக்கருவிகளான கற்கோடாரிகள் (axes), வாய்ச்சிகள் (adzes) போன்ற கற்கருவிகளைக் கூர்மையாக்கப் பயன்பட்ட சிராய்ப்பு வரித்தடங்கள் (grooves) கொண்ட பல தொல்லியல் தளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதன் வாயிலாக புதிய கற்காலப் பண்பாடு இருந்ததை உறுதிப்படுத்துகின்றன (Narasimhaiah 1980, Rajan 1997; Gnanaraj 2023). தற்போது அகழாய்வு செய்யப்பட்ட மயிலாடும்பாறை, கீழ்நமண்டி, மோளப்பாளையம், வலசை, சென்னானூர் போன்ற தொல்லியல் தளங்கள் புதிய கற்காலப் பண்பாட்டைப் பற்றிய சில குறிப்பிட்டத் தகவல்களைத் தருகின்றன (Rajan et.al. 2022; Selvakumar 2021; Soundararajan 2020; Gnanaraj 2023) (அட்டவணை 3-4; விளக்கப்படம் 5). இவற்றிற்குச் சரியான கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் இல்லாத காரணத்தால் புதிய கற்காலப் பண்பாட்டின் காலத்தின் எல்லையை வரையறை செய்ய இயலவில்லை. இரும்புக் காலத் தளங்களில் காணப்படும் புதியகற்காலக் கருவிகளை மட்டும் கொண்டு அந்தத் தளத்தைப் புதிய கற்கால இடமாக அடையாளப்படுத்துவது என்பது தெளிவற்ற ஒரு முடிவாக ஆகிவிடுகிறது. மேலும் கிடைக்கப்பெற்ற பானை மற்றும் கற்கருவிகள் பற்றிய பல்வேறுபட்ட விளக்கங்கள் புதிய கற்காலப் பண்பாடு பற்றி ஒரு தெளிவற்ற புரிதலைத் தருகிறது. ஆயினும், அண்மையில் உள்ள மற்ற தென் மாநிலங்களில் புதிய கற்காலப் பண்பாட்டுக் கூறுகளும், காலமும் முறையாக வரையறை செய்யப்பட்டுள்ளன. கர்நாடகாவில் நன்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சங்கனகல்லு மற்றும் குப்கல் தொல்லியல் தளங்களைச் சான்றாகக் குறிப்பிடலாம் (Korisettar 2014). தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதிகளில் உள்ள புதிய கற்கால வாழ்விடங்களை அடையாளப்படுத்துவதிலும் பகுத்தாய்வு செய்வதிலும் உள்ள குறைகளைத் தாண்டி, தற்போது அகழாய்வு செய்யப்பட்ட மயிலாடும்பாறை, சென்னானூர், வலசை போன்ற புதிய கற்காலத் தொல்லியல் தளங்களும் (படங்கள் 6-7) மற்றும் புதிய கற்காலத் தொழிற்கூடங்களாக அடையாளப்படுத்தப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கப்பலவாடி, வரட்டனப்பள்ளி மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கீழ்நமண்டி மற்றும் புதிய கற்காலக்கருவிகள் உருவாக்க பயன்படுத்தப்பட்ட சிராய்ப்பு வரித்தடங்கள் கொண்ட 30க்கும் மேற்பட்ட தொல்லியல் தளங்கள், புதிய கற்காலப் பண்பாடு தமிழ்நாட்டில் இருந்ததைத் தெளிவாக உணர்த்துகின்றன. புதியகற்காலக் கருவி தயாரிப்புச் செயல்முறையை மூன்று கட்டங்களாகக் காணலாம். முதற்கட்டத்தில், அனற்பாறைகளின் ஊடே இருக்கும் டோலரைட் (dolerite) பாறைகளிலிருந்து கற்கருவிகள் செய்ய பெரிய டோலரைட் துண்டுகள் கற்சில்லுகளாக பிரித்தெடுக்கப்படும். இரண்டாவது கட்டத்தில், தேவைப்படும் வடிவத்தின் முன்மாதிரியைப் பெற, பெரிய சில்லுகள் மூலக்கற்களிலிருந்து அகற்றப்படும். மூன்றாவது கட்டத்தில், பெருஞ்சில்லுகள்



விளக்கப்படம் 4: புதிய கற்காலம் மற்றும் புதிய கற்கால - நுண்கற்கால மாற்றல் நிகழ்கால நிலை



விளக்கப்படம் 5: அறிவியல் காலக்கணக்கீடுகளுடன் கூடிய தமிழ் நாட்டின் புதிய கற்காலத் தொல்லியல் தளங்கள்

படம் 6: புதிய கற்காலக் கருவிகள் செய்யும் தொழிற்கூட தளங்கள்

படம் 7: புதிய கற்காலத் தொல்லியல் தளங்கள்

அகற்றப்பட்ட மூலக்கல்லின் ஒரு பக்கத்தில் சில்லுகள் அகற்றப்படும், மறு பக்கத்தில் ஒரு முனை மற்றொன்றைவிட பெரிய கோணத்தில் இருப்பதாக அமைக்கப்படும். கற்கருவி உருவாக்கத்தின் இந்த முதல் இரு கட்ட நிகழ்வுகள் மூலக்கற்கள் கிடைக்கும் தளங்களிலேயே நடைபெறுகின்றன. முழுமை பெறாத புதிய கற்காலக்கருவிகளை கூர்மையாக்கும் தேய்ப்பு வரித்தடங்கள் கொண்ட தளங்கள் நீர்நிலை பகுதிகளுக்கு அருகில் குறிப்பாக நீர் ஊற்றுகளுக்கு அருகில் புதியகற்கால வாழ்விடப் பகுதியோடு கிடைப்பது, கற்கருவி செய்தலின் இறுதிக்கட்டமான கூர்மையாக்குதலும் மெருகூட்டலும் வாழ்விடப் பகுதிக்கு அருகிலேயே நடந்துள்ளது என்பதைக் குறிக்கின்றது. கப்பலவாடி, வரட்டனப்பள்ளி மற்றும் கீழ்நமண்டி ஆகிய தொல்லியல் தளங்களில் அதிக அளவில் கிடைத்த சில்லுகள் மற்றும் முழுமை பெறாத கற்கருவிகள் இங்கு சில்லுகள் நீக்கும் செயல்முறை நடந்துள்ளதையும் மற்ற தளங்களில் கூர்மையாக்குதல் மற்றும் மெருகூட்டல் நடந்துள்ளது என்பதையும் எடுத்துரைக்கின்றன. மயிலாடும்பாறை அகழாய்வில் இரும்புக் காலப் பண்பாட்டைச் சார்ந்த மண்ணடுக்கிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரியின் கரிமக் கதிரியக்கக் (AMS) காலக்கணக்கீடு கி.மு. 2142 என்றும், சிவகளையில் எடுக்கப்பட்ட மாதிரியின் காலம் கி.மு. 3345 என்றும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழ்நாட்டில் புதிய கற்காலப் பண்பாடு கர்நாடகா மாநிலத் தளங்களைவிட முந்தையதாக இருக்கக் கூடும் என்பது உறுதியாகின்றது (Rajan and Sivanantham 2025). இரும்புக் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தால் புதிய கற்காலக் கருவிகள் பயன்பாட்டில் இருந்து மெல்ல மெல்ல மறைந்து இருக்க வேண்டும். ஆயினும், அது தொடர்ந்து இரும்பு காலத்திலும் சடங்காகவோ அல்லது நினைவைப் போற்றும் வகையிலோ பயன்பாட்டில் இருந்திருக்க வேண்டும் என்பதை இரும்புக்கால பண்பாட்டில் இக்கருவிகள் கிடைப்பதைக் கொண்டு உய்த்துணரலாம்.

இரும்புக்காலம்

தென்னிந்தியாவில் தொடக்க வரலாற்றுக் காலத்திற்கு முந்தையதாகவும் நுண்கற்கால அல்லது புதிய கற்காலப் பண்பாட்டிற்கு அடுத்ததாகவும் வரும் இரும்புக்காலத்தை, வரலாற்றுதய காலப் பண்பாடு (*protohistoric culture*), கருப்பு-சிவப்பு பானை வகைப் பண்பாடு, பெருங்கற்காலப் பண்பாடு அல்லது இரும்புக் காலப் பண்பாடு எனப் பல்வேறு பண்பாட்டுப் பெயர்களால் எந்தவித கால வரையறையோ, நிலம்சார் பண்பாட்டுப் புரிதலோ இன்றி அழைக்கப்படுகிறது. இரும்புக் காலம், பெருங்கற்படைக் காலம் அல்லது தொடக்க வரலாற்றுக் காலம் என அழைக்கப்படும் பண்பாடுகளுக்கு இடையே எந்தவிதமான தெளிவான காலவரையறையும் இல்லை. இரும்புக் காலம் அல்லது பெருங்கற்படைக்காலம் என்பது வரலாற்றுத் தொடக்க காலத்திற்கு முந்தையதாகப் புழக்கத்தில் இருந்த ஒருவகையான ஈமச் சடங்கு முறைக்குக் கொடுக்கப்பட்ட பெயராக உள்ளது. இருப்பினும், இந்த ஈமச்சடங்கு முறை தொடக்க வரலாற்றுக்காலம் வரை தொடர்ந்து வந்துள்ளது. கொடுமணல், பொருந்தல் ஆகிய தொல்லியல் தளங்களில் மேற்கொள்ளப்பட்ட பெருங்கற்படைச் சின்னங்களான கற்பதுக்கை மற்றும் வடலூர் அருகில் உள்ள மருங்கூரில் கிடைக்கும் முதுமக்கள் தாழி ஆகியவற்றில் கிடைத்த தமிழி எழுத்து (தமிழ்-பிராமி) பொறிக்கப்பட்ட பானை ஓடுகளின் வழியாக , தொடக்க வரலாற்றுக்காலம் வரை இம்மரபு தொடர்ந்திருந்ததை உறுதியாக்குகின்றது (Rajan 2016; Rajan and Sivanantham 2025). எனவே, மண்ணடுக்கு மற்றும் பண்பாட்டுச் சான்றுகளின் அடிப்படையில் இரும்புக் காலப் பெருங்கற்படைச் சின்னங்களில் இருந்து தொடக்க

வரலாற்றுக் காலப் பெருங்கற்படைச் சின்னங்களை பிரித்துப் பார்க்க வேண்டியுள்ளது. தற்போது, இரும்புக் காலத்தின் தொடக்கத்தைப் புரிந்துகொள்ளத் தேவையான அளவு கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் இருக்கின்றன.

கடந்த சில ஆண்டுகளாக அறிஞர்கள் பலர் இந்தியாவில் இரும்பு அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தை கண்டறியத் தேவையான தகவல்களைச் சேகரிக்க முயன்று கொண்டிருக்கின்றனர். முதன் முதலில் 1971-இல் கர்நாடக மாநிலம் ஹல்லூர் எனும் தொல்லியல் தளத்தில் கிடைத்த கரிமக்காலக் கணக்கீடு அடிப்படையில் இரும்பின் தொடக்கக்காலம் கி.மு. 1100 என்றும், பின்னர் 1979-இல் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள அஹார் தொல்லியல் தளத்தின் கரிமக்காலக் கணக்கீடு கி.மு.1300 என்றும் கருதப்பட்டது. பின்னர் கர்நாடகாவில் குமரணஹள்ளி மற்றும் உத்தரப்பிரதேச மாநிலத்தில் லவுரதேவா ஆகிய தளங்களும் அதே காலகட்டத்தைச் சேர்ந்ததாகக் கருதப்பட்டது (Nagaraja Rao 1971; Sahi 1979; Agrawal and Joshi 1990; Tewari 2002). கர்நாடகாவில் உள்ள புக்கசாகரா என்ற தொல்லியல் தளத்திலிருந்து மூன்று மாதிரிகளிலிருந்து பெறப்பட்ட நான்கு கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் இரும்பு அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தை கி.மு. 1620க்கு கொண்டு சென்றது (Johansen 2014). பின்பு இந்தக் காலக்கணக்கீடானது உத்தரப்பிரதேசத்தில் உள்ள தாத்பூர், மல்கார், ராஜ்புரா, ஜம்மு காஷ்மீரில் உள்ள குப்கரல், கர்நாடகாவில் உள்ள மஸ்கி (Tewari 2003) ஆகிய தொல்லியல் தளங்களில் கிடைத்த காலக்கணக்கீடுகளின் அடிப்படையில் கி.மு.1700-1800க்குக் கொண்டு செல்லப்பட்டது. கர்நாடகாவின் பிரம்மகிரி (கி.மு. 2140-1940) மற்றும் தெலுங்கானாவின் கச்சிபவுளி (கி.மு. 2220) ஆகிய தளங்களில் கிடைத்த காலக்கணக்கீடுகள் இரும்பின் காலத்தை கி.மு. 3 ஆம் ஆயிரம் ஆண்டின் (3rd millennium BCE) முற்பகுதிக்குக் கொண்டு சென்றது (Morrison 2005; Thomas et.al., 2008).

ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளை ஆகிய தொல்லியல் தளங்களில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள், இதுவரை இந்தியாவில் இரும்பின் தொடக்கம் அல்லது அறிமுகம் குறித்து கொண்டிருந்த கருத்துகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. சிவகளைத் தொல்லியல் தளத்தில், இரும்புப் பொருட்கள் கிடைத்த மண்ணடுக்குகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகள், கரிமக் கதிரியக்கக் காலக்கணக்கீடு மற்றும் தூண்டொளி ஒளிர்வு காலக்கணக்கீடு எனும் இரண்டு முக்கியமான அறிவியல் முறைகளில் (13-AMS14C and 7-OSL) காலக்கணக்கீடு செய்வதற்கு அமெரிக்காவில் உள்ள பீட்டா பகுப்பாய்வு ஆய்வகம், அரிசோனா பல்கலைக்கழக ஆய்வகம், இன்டர்-யுனிவர்சிட்டி ஆக்சிலரேட்டர் சென்டர் (IUAC, New Delhi), பீர்பால் சகானி தொல் அறிவியல் நிறுவனம் (BSIP, Lucknow) மற்றும் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் (PRL, Ahmedabad) ஆகிய ஐந்து வெவ்வேறு அறிவியல் ஆய்வகங்களுக்கு அனுப்பப்பட்டு அவற்றின் முடிவுகள் பெறப்பட்டன. இவ்வாய்வு முடிவுகளின் வாயிலாக இரும்பின் அறிமுகம் கி.மு. 2427 முதல் கி.மு. 3345 எனக் காலக்கணக்கீடு செய்யப்பட்டுள்ளது (படங்கள் 8-10; விளக்கப்படம் 6). ஐந்து வெவ்வேறு ஆய்வகங்களில் இருந்து இருவேறு அறிவியல் நுட்பங்களைப் ($AMS^{14}C$ மற்றும் OSL) பயன்படுத்திப் பெறப்பட்ட முழுமையான காலக்கணக்கீடுகளின் அடிப்படையில், இந்தியாவில் இரும்பின் அறிமுகம் மூன்றாம் ஆயிரமாண்டின் இறுதி பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டது (later part of third millennium BCE). கி.மு.2500-3000 என்ற கால எல்லை வரையறை பொது மதிப்பாக



விளக்கப்படம் 6: தமிழ் நாட்டின் இரும்புக்காலத் தொல்லியல் தளங்கள்

படம் 8: சிவகளை : இரும்புக்கால ஈமத்தாழிகள் மற்றும் தொல்பொருட்கள்

படம் 9: இரும்புக்கால ஈமத்தாழிகள்



படம் 10: இரும்புக்கால கற்பதுக்கைகள்

எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் இரு காலக்கணக்கீடுகள் கி.மு. நான்காம் ஆயிரமாண்டின் முற்பகுதியை சேர்ந்தவையாக உள்ளன (கி.மு. 3259 மற்றும் கி.மு. 3345) (*Rajan and Sivanantham 2025*).

